எண்ணிக்கையைப் பொறுத்தவரையில்--சுமார் 7¼ இலட்சம். அதேபோன்று, உள்நாட்டுப் பயணிகளைப் பொறுத்தவரையில், சுமார் 2 கோடிக்கு மேல் வருகை தந்திருக்கிறார்கள். எவ்வளவு வருமானம் வெளிநாட்டுப் பயணிகள் என்ற முறையில் கிடைத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 600, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

600—

தொழிற்கூடங்கள்

*28195—**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்களைக் கதர்த் தொழில் வாரியத்தின் மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்கள் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதி என்பது எவ்வித தொழில் வசதியும் இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே ஒகேனக்கல் என்று சொல்லக்கூடிய ஒரு சுற்றுலா மையம், பொது மக்கள் தினந்தோறும் அதிக அளவிலே சென்று வரக்கூடிய நீர்வீழ்ச்சி கொண்ட பகுதியாக அமைந்திருக்கிறது. அங்கே சுற்றுலா மையங்களில் இருக்கின்ற கடைகளிலே குழந்தைகள் விளையாடக்கூடிய பொம்மைகள் மற்றும் அழகுப் பொருட்கள் எல்லாம்

2000 மே 11]

விற்பனையாகக்கூடிய ஒரு மையமாக இருக்கிற காரணத்தால், அங்குத் தொழில் வசதியைப் பெருக்குகின்ற நோக்கத்தோடும், சுற்றுலா மையம் என்ற நோக்கத்தோடும் அந்தப் பகுதியிலே காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கக்கூடிய பொம்மைத் தொழிற்சாலையை நிறுவுவதால் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும், கடைகளை வைத்துப் பிழைப்பு நடத்தக்கூடியவர்களுக்கு வாய்ப்பும் ஏற்படும் என்ற காரணத்தாலே அங்கே இப்படிப்பட்ட தொழிற்சாலை நடப்பு ஆண்டிலே கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைச் சிறப்பு மாவட்டமாக, மும்பை கதர் ஆணையக் குழுமமும், தமிழ்நாடு கதர் வாரியமும் இணைந்து, இப்போது தேர்வு செய்து இருக்கின்றன விளிம்புக் கடன் தொகையை வழங்குவதற்கு. அந்தக் கடனுதவித் திட்டத்தைத் தொழில் முனைவோர்கள் பயன்படுத்திக்கொண்டால், அந்தப் பொம்மைக் காகிதக்கூடங்கள் தயாரிப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பதினைந்தாம் பட்டியல்

1—

உருது ஆசிரியர் பணியிடங்கள்

வினா எண் **12929—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட உருது ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS